**<u>சுருக்கம்</u>**

தொழில் துறை – தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் – ராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டம், வாலிநோக்கம் உப்பள வளாகத்தில் 50 மெகாவாட் மின் திறன் கொண்ட சூரிய வெப்ப சலன மின் உற்பத்தியுடன் கூடிய 15 mld கடல் நீரை சுத்திகரிக்கும் திட்டம் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**<u>தொழில் (எம்.ஐ.இ.1)துறை</u>**

**அரசாணை (டி) எண் 116** **நாள் : 31.07.2014**
**ஜய, ஆடி 15,**
**திருவள்ளுவர் ஆண்டு –2045**

**ஆணை:**

24.07.2014 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கீழ்க்காணும் தொழில் வளர்ச்சி திட்டம் குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது:

"தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டங்களின் சமூக பொருளாதார வளர்ச்சியில் ஆக்கபூர்வமான தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில், ராமநாதபுரம் மாவட்டம் கடலாடி வட்டத்தில் உள்ள வாலிநோக்கம் உப்பள வளாகத்தில் 500 ஏக்கர் அரசு நிலத்தில் 50 மெகாவாட் மின் திறன் கொண்ட சூரிய வெப்ப சலன மின் உற்பத்தியுடன் கூடிய 15 mld கடல் நீரை சுத்திகரிக்கும் திட்டம் ஒன்று 1500 கோடி ரூபாய் செலவில் டிட்கோ நிறுவனத்தால் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தின் மூலம் ஏறத்தாழ ஆண்டிற்கு 190 மில்லியன் யூனிட்டுகள் மின் உற்பத்தி செய்யப்படும். இத்திட்டத்திலிருந்து வெளியாகும் உப்பு நீரிலிருந்து உப்பை உற்பத்தி செய்ய தமிழ்நாடு உப்பு நிறுவனம் நடவடிக்கை மேற்கொள்ளும்".

2. மேற்கண்ட தொழில் வளர்ச்சி திட்டத்தினை தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் பிற அரசு பொதுத்துறை நிறுவனங்களுடன் இணைந்து ஒரு சிறப்பு நோக்க அமைப்பின்மூலம் செயல்படுத்தவும், குறிப்பிட்ட கால அளவிற்குள் இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் மற்றும் இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் ஏற்படும் முன்னேற்றம் குறித்து மாதந்தோறும் அரசுக்கு அறிக்கை அனுப்பவும் டிட்கோ நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநருக்கும், தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் மேலாண் இயக்குநருக்கும் அறிவுறுத்தி அரசு ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ச. வி. சங்கர்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர்,
டிட்கோ,19–ஏ, ருக்மணி –இலட்சுமிபதி சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.
மேலாண் இயக்குநர்,தமிழ்நாடு உப்பு நிறுவனம்,
735, அண்ணா சாலை,LLA Building,சென்னை – 600 002.
நகல்
தொழில் (வசெதி) துறை, சென்னை – 600 009.
தொழில் (எம்ஐஎப்) துறை, சென்னை – 600 009.
தொழில் (அநமு.2) துறை, சென்னை – 600 009.
இருப்புக்கோப்பு /உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

31.7.2014
பிரிவு அலுவலர்